# க.பொ.த. (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2015

| வரலாறு I | ஒரு மணித்தியாலங்கள் |
|---|---|

**கவனிக்க**:
* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் **80** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

**1.** வினயபிடகம் எனும் நூலுக்குப் பாளி மொழியில் எழுதப்பட்ட விளக்க நூல்
(1) ஜாதகக் கதை (2) சமந்தபாசாதிக்கா (3) தம்மபதட்ட கதை (4) அத்தசாலினிய

**2.** இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான மூலாதாரங்கள்
(1) கல்வெட்டுக்கள் (2) நாணயங்கள் (3) இலக்கியங்கள் (4) கலைப் படைப்புக்கள்

**3.** முற்காலத்தில் இலங்கை 'செரன்டிப்' என அழைக்கப்பட்டது
(1) அராபியர்களால் (2) கிரேக்கர்களால் (3) உரோமர்களால் (4) இந்தியர்களால்

**4.** தொழினுட்பம், அழகியல், பூங்கா அமைப்பு என்பன உயர் மட்டத்தில் இருந்தன என்பதை உறுதிசெய்யும் வரலாற்று இடம்
(1) தம்பதெனிய (2) ரிட்டிகல (3) சீகிரியா (4) மிகிந்தலை

**5.** பின்வரும் விடைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் மரணச் சடங்கு தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள உதவும் இடங்களைக் கொண்ட விடை யாது?
(1) பெல்லன்பதிபெலஸ்ஸ, அத்தனகொட அலுலென (2) பட்டதொம்பலென, இராவணன் எல்ல குகை
(3) பட்டதொம்பலென, பாகியன்கல குகை (4) நில்கல பெலிகல்கே, பெல்லன்பதிபெலஸ்ஸ

**6.** ஆரியக் குடியேற்ற பரம்பல் தொடர்பாகப் பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ரீதியாக ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை
A - பத்தகச்சானா உள்ளிட்ட குழுவினரின் வருகை
B - விஜிதகாம, தீககாம குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
C - மதுராபுரி இளவரசி உள்ளிட்ட குழுவினரின் வருகை
D - உபதிஸ்ஸகாம, அனுராதகாம என்பன தோற்றம் பெற்றமை
(1) D, A, B, C (2) B,C, A, D (3) D, B, A, C (4) D, C, A, B

**7.** பின்வரும் நிகழ்வுகளில் வலகம்பா மன்னனின் காலத்தில் நிகழ்ந்தவை மாத்திரம் உள்ளடங்கிய விடை
A - மகா விகாரை நிறுவப்பட்டமை B - தனிப்பட்ட ரீதியில் முதலாவது ஆராமை அன்பளிப்பு செய்யப்பட்டமை
C - சங்கத்தில் (நிக்காய) பேதம் ஏற்பட்டமை D - ஜேதவன விகாரை அமைக்கப்பட்டமை
(1) A , B (2) A, C (3) A, D (4) B, C

**8.** பொலன்னறுவைக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் சில 'அ' நிரலிலும், அவற்றோடு தொடர்புடைய நபர்களின் பெயர்கள் 'ஆ' நிரலிலும் கொடுக்கப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு அமைவாக 'ஆ' நிரலை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்தமை | A கலிங்க மாகன் |
| (ii) தந்ததாதுவையும், பாத்திர தாதுவையும் பெற்று அரச பதவியை உறுதிசெய்து கொண்டமை | B நிசங்கமல்லன் |
| (iii) துலாபாரக் கொடை வழங்கியமை | C முதலாம் விஜயபாகு |
| (iv) பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்தமை | D முதலாம் பராக்கிரமபாகு |
| | E இரண்டாம் விஜயபாகு |

(1) C, D, B, A (2) C, B, D, E (3) B, C, D, A (4) D, B, A, E

/பக். 2 ஐப் பார்க்க.

**9.** ‘அ’ நிரலில் கொடுக்கப்பட்டுள்ள கால்வாய் வழியாக நீர் கொண்டு செல்லப்பட்ட இடங்கள் ‘ஆ’ நிரலில் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தினால் சரியான விடையாக அமைவது,


| நிரல் ‘அ’ | | நிரல் ‘ஆ’ | |
|---|---|---|---|
| (i) | அங்கமடில்ல கால்வாய் | A | அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு |
| (ii) | யோதக் கால்வாய் | B | மகாவலி கங்கையிலிருந்து அம்பன் கங்கைக்கு |
| (iii) | எலஹரக் கால்வாய் | C | தெதுறு ஓயாவிலிருந்து மாகல்ல வாவிக்கு |
| (iv) | ரிதிபெந்தி கால்வாய் | D | கலா வாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு |
| | | E | அம்பன் கங்கையிலிருந்து மின்னேரிய கிரித்தல வாவிக்கு |

(1) A, D, E, C (2) A, B, E, C (3) E, B, C, A (4) E, D, B, C

**10.** ‘பிட்டதடஹச’, ‘மதஹச’, ‘அகலஹச’ ஆகிய நெல் பயிரிடப்படும் மூன்று போகங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

(1) சித்துல்பவ்வ (2) குசலானகந்த (3) பம்பரகல (4) தோணிகல

- **கொடுக்கப்பட்டுள்ள இந்தியப் படத்தின் உதவியுடன் 11, 12 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




**11.** மகதத்தின் தலைநகரான பாடலிபுத்திரம் எந்த எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?

(1) A
(2) B
(3) C
(4) D

**12.** கிருஷ்ணா நதி எந்த இலக்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?

(1) 1
(2) 2
(3) 3
(4) 4

**13.** A - திரிலோக சுந்தரியை விவாகம் செய்து கொள்ளல்
B - பண்டுவாசுதேவன் உள்ளிட்ட குழுவினரின் வருகை
C - சங்கமித்தா பிக்குணி உள்ளிட்ட குழுவினரின் வருகை
D - சோமா தேவியைக் கடத்திச் செல்லுதல்.

மேற் கூறப்பட்டவற்றை வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை

(1) B, D, C, E (2) B, C, D, A (3) D, C, A, B (4) B, C, A, D

**14.** கலிங்க மாகன் பொலன்னறுவையை ஆட்சி செய்யும்போது கோவிந்த மலையில் சுயாதீன நிருவாகத்தை முன்னெடுத்துச் சென்ற பிரதேசத் தலைவன்

(1) சுப தளபதி (2) சங்க தளபதி
(3) புவனேகபாகு ஆதிபாதன் (4) விஜயபாகு

**15.** A - பெலிகலக் குன்றின் உச்சியில் தலதா மாளிகையை அமைத்தல்
B - கண்டியில் அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தல்
C - ஜாதகக் கதை நூலை சிங்களத்தில் மொழிபெயர்க்க ஆதரவு வழங்குதல்
D - சந்திரபானுவை இரு முறை தோற்கடித்தல்

மேற்கூறப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் நான்காம் பராக்கிரமபாகு மன்னனது காலத்திற்குரிய நிகழ்வுகள் உள்ளடங்கிய விடை

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) B யும் D யும்

**16.** யாப்பகுவ இராசதானியின் முதலாவது ஆட்சியாளனாக விளங்கியவன்,

(1) நான்காம் விஜயபாகு (2) முதலாம் புவனேகபாகு
(3) நான்காம் பராக்கிரமபாகு (4) இரண்டாம் புவனேகபாகு

[பக். 3 ஐப் பார்க்க.

**17.** பின்வரும் 'அ' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்கள் அரசராவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பெயர்கள் 'ஆ' நிரலில் கொடுக்கப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்குப் பொருத்தமாக 'ஆ' நிரலை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை

| **நிரல் 'அ'** | **நிரல் 'ஆ'** |
|---|---|
| (i) ஆறாம் புவனேகபாகு | A டிக்கிரி பண்டார இளவரசன் |
| (ii) எட்டாம் வீரபராக்கிரமபாகு | B மகா அஸ்தான இளவரசன் |
| (iii) முதலாம் இராஜசிங்கன் | C அம்புலுகல இளவரசன் |
| (iv) இரண்டாம் இராஜசிங்கன் | D சப்புமல் இளவரசன் |

(1) A, C, D, B (2) D, A, B, C (3) C, D, B, A (4) D, C, A, B

**18.** முதலாம் இராஜசிங்க மன்னனால் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற **முடியாமைக்கான** காரணம்
(1) மன்னனுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமை
(2) முதலாம் இராஜசிங்க மன்னன் சிறந்த ஆட்சியாளனாக செயற்படாமை
(3) முதலாம் இராஜசிங்க மன்னனுக்குக் கடற்படை வலிமை இல்லாமை
(4) தர்மபாலன் கோட்டை இராச்சியத்தை நன்கொடைப் பத்திரத்தின் மூலம் போர்த்துக்கேயருக்கு வழங்கியமை



**19.** கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணப்படுவது,
(1) இஸ்லாமிய கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட குதுப்மினார் ஆகும்.
(2) இஸ்லாமிய கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட அங்கோர்வட் கோயிலாகும்.
(3) பர்மிய சம்பிரதாயத்திற்கு அமையக் கட்டப்பட்ட புத்தகயாவாகும்.
(4) மொகலாயக் கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட தாஜ்மஹால் ஆகும்.

**20.** பின்வருவனவற்றில் ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்கு வருவதற்கான முக்கிய காரணங்களாக அமைந்த விடயங்களைக் கொண்ட விடை
A - வர்த்தக ஏகபோக உரிமை பெறல்
B - அரசர்களின் புகழையும், வலிமையையும் பெருக்கிக் கொள்ளுதல்
C - கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல்
D - அரசர்கள் கடற்பிரயாணங்களுக்கு ஆதரவு நல்குதல்
(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் B யும்

**21.** A - நீதித்துறைச் செயற்பாடுகள் பிரபுக்களிடம் இருந்தமை
B - நிலத்தில் பயிர் செய்தலின் மூலம் பெறப்படும் வருமானம் முக்கிய இடத்தைப் பெறல்
C - பயிர்ச்செய்கையின் பொருட்டு நிலமாற்று முறையும், பயிர் மாற்று முறையும் மேற்கொள்ளல்
D - பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சமூக அந்தஸ்து நிலவுதல்
மேற்கூறப்பட்டவற்றில் ஐரோப்பாவின் மானிய முறைப் பொருளாதார இயல்புகளை மட்டும் உள்ளடக்கிய விடையாக அமைவது,
(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

**22.** A - பைபிளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தல்
B - திருச்சபையை விமர்சித்ததால் மரணத்திற்கு உள்ளாகுதல்
A, B என்ற நிகழ்வுகளுக்கு உட்பட்ட சமய தத்துவவாதிகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடை யாது?
(1) மார்டின் லூதர், உல்ரிச் சுவிங்ளி
(2) மார்டின் லூதர், ஜோண் கல்வின்
(3) ஜோண் வைக்கிளிப், ஜோண் ஹஸ்
(4) ஜோண் கல்வின், ஜோண் ஹஸ்

**23.** ஒல்லாந்தரது கீழைத்தேச நிருவாகத் தலைமை நிலையமாக விளங்கியது,
(1) பத்தேவியா (2) கல்கத்தா (3) கோவா (4) சென்னை

**24.** ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பலின்போது சமயப் பரப்புதலின் பிரதான ஊடகமாக விளங்கியது,
(1) வர்த்தகம் (2) கல்வி (3) சுகாதாரம் (4) விவசாயம்

/பக். 4 ஐப் பார்க்க.

**25.** 'அ' நிரலில் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்களின் சிபார்சுகள் 'ஆ' நிரலில் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) கோல்புறூக் | A சர்வசன வாக்குரிமை |
| (ii) டொனமூர் | B சட்டவாக்கக் கழக உறுப்பினர் தொகையை 21 வரை உயர்த்துதல் |
| (iii) குறூ மக்கலம் | C 16 மாகாணங்கள் ஐந்து மாகாணங்களாகக் குறைக்கப்படல் |
| (iv) சோல்பரி | D பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை நியமித்தல் |

(1) A, B, C, D (2) C, A, B, D (3) C, B, D, A (4) D, A, C, B

**26.** நிரல் 'அ' உடன், நிரல் 'ஆ' வை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) செஞ்சட்டைப் படை | A பிரான்சியப் புரட்சி |
| (ii) 'மீண்டும் பிறத்தல்' எனும் நூல் | B இத்தாலி |
| (iii) 'பஸ்டீல்' தாக்கப்படல் | C கவூண்ட் கவூர் |
| (iv) பதினாறாம் லூயி மன்னன் | D மாரி அன்டனட் |

(1) B, C, D, A (2) A, D, B, C (3) B, C, A, D (4) A, B, C, D

**27.** பின்வரும் கூற்றுக்களில் சுபாஸ் சந்ரபோஸ் தொடர்பான சரியான விடை
(1) இந்தியாவில் முஸ்லீம்களுக்கென தனியான அரசொன்றைக் கோரியமை
(2) பிரித்தானியருக்கு எதிராக இரகசியமாகப் படை திரட்டியமை
(3) 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றமை
(4) சுயராச்சியக் கட்சியை ஆரம்பித்து சுதந்திரத்திற்காகப் போராடியமை

**28.** மா ஓ சேதுங்கினால் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் செயற்படுத்தப்பட்டது.
(1) விவசாயத் துறையில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு
(2) நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தை அமைதிப்படுத்தும் பொருட்டு
(3) கைத்தொழில் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு
(4) வெற்றிகரமான புரட்சிக் கருத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு

**29.** 'அ' நிரலிலுள்ள துறைகளை 'ஆ' நிரலிலுள்ள நபர்களின் பெயர்களுடன் முறையாக இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) இலக்கியம் | A மைக்கல் ஆஞ்சலோ |
| (ii) வைத்தியம் | B அமெரிக்கோ வெஸ்புசி |
| (iii) ஓவியம் | C தோமஸ் மூர் |
| (iv) வானியல் | D பெரசல்சஸ் |
| | E கலிலியோ கலிலி |

(1) A, B, D, E (2) B, A, C, E (3) C, D, A, E (4) C, E, A, B

**30.** நீர்ப்பாசனத்துறையை ஒழுங்கமைத்து விவசாய வளர்ச்சிக்கு உதவிய பிரித்தானிய ஆளுநர்களின் பெயர்கள் 'அ' நிரலிலும், அவர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளங்களின் பெயர்கள் 'ஆ' நிரலிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாக இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) ஹென்ரி வோட் | A கந்தளாய் |
| (ii) ஹர்கியுலஸ் ரொபின்சன் | B நாச்சதுவ |
| (iii) வில்லியம் கிரகரி | C இரக்காமம் |
| (iv) வெஸ்ட் ரிஜ்வே | D திஸ்ஸமகாராம |

(1) C, B, D, A (2) C, D, A , B (3) C, A, B, D (4) D, A, C, B

[பக். 5 ஐப் பார்க்க.

**31.** முதலாம் உலக மகா யுத்தத்திற்கான உடனடிக் காரணம்

(1) சரஜிவோ சம்பவம்
(2) அல்சாஸ் - லொரேன் பிரச்சினை
(3) பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை
(4) குடியேற்றங்கள் தொடர்பான போட்டி

**32.** மொரோக்கோ தொடர்பாக பிரான்சுக்கும், ஸ்பானியாவுக்கும் இடையிலான போட்டியில் பிரான்சிற்கு எதிராக ஸ்பானியாவுக்கு உதவிய ஜேர்மனியப் பேரரசன்

(1) கெய்சர் வில்லியம்
(2) ஒட்டோவன் பிஸ்மார்க்
(3) அடோல்ப் ஹிட்லர்
(4) நெப்போலியன் பொனபாட்

**33.** ஆளுநர் நாயகம் பதவிக்குப் பதிலாகப் பெயரளவு நிர்வாகியாக ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு

(1) டொனமூர் யாப்பு
(2) சோல்பரி யாப்பு
(3) முதலாம் குடியரசு யாப்பு
(4) இரண்டாம் குடியரசு யாப்பு

**34.** 1978 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய மக்கள் இறைமை என்பதால் கருதப்படுவது,

(1) நிறைவேற்று அதிகாரம் (2) நிர்வாக அதிகாரம் (3) நீதித்துறை அதிகாரம் (4) உயர் அதிகாரம்

**35.** பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் அகில இலங்கையும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றது?

A - பொதுத் தேர்தல்
B - ஜனாதிபதித் தேர்தல்
C - பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு
D - உள்ளூராட்சித் தேர்தல்

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) B யும் D யும்

**36.** இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை மட்டும் உள்ளடக்கும் விடை

A - தேர்தல் வேட்பாளர்கள் குழுவாக முன்வருதல்
B - தாம் விரும்பும் அரசியல் கட்சிக்கு வாக்களித்து, தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளித்தல்
C - ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒரு கட்சியிலிருந்து ஒரு வேட்பாளர் மாத்திரம் போட்டியிடல்
D - ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் தெரிவு செய்யும் உறுப்பினர்களின் தொகையை முன்கூட்டியே தீர்மானித்தல்

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D

**37.** தற்போதைய இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

(1) 220 (2) 196 (3) 225 (4) 248

**38.** இலங்கையில் நீதிமன்றத் தொகுதியின் ஆரம்ப நீதிமன்றமாக விளங்குவது

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(2) இணக்க சபை
(3) உச்ச நீதிமன்றம்
(4) மேல் நீதிமன்றம்

**39.** இலங்கையில் நிலவிய இராஜகாரிய முறையை நீக்கிய ஆங்கில ஆளுநர்

(1) விலியம் கிரகரி (2) பிரட்ரிக் நோர்த் (3) தோமஸ் மெயிட்லன்ட் (4) எட்வட் பாண்ஸ்

**40.** A - யப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கை
B - லுசிடானியாக் கப்பலை மூழ்கடித்தல்
C - இத்தாலியில் முசோலினியின் செயற்பாடு
D - சீனாவின் ஷேன்டுங் தீபகற்பத்தை யப்பான் கைப்பற்றியமை

மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் இரண்டாம் உலா மகா யுத்தம் ஆரம்பமாவதற்குக் காரணங்களாய் அமைந்தவை

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

***

# க.பொ.த. (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2015

**வரலாறு II** | மூன்று மணித்தியாலங்கள்

**கவனிக்குக :**

* பகுதி **I** இன் **முதலாம்** வினா கட்டாயமானது.
* பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களுக்கும், பகுதி **III** இலிருந்து **இரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) வழங்கப்பட்டுள்ள **இலங்கைப்** படத்தில் பகுதி **(i)** இலுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும், **உலகப்** படத்தில் பகுதி **(ii)** இன் கீழே தரப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

**(i)** மகாநாகஹுல, தப்போவா வாவி, மினிப்பே அணை, மகாதித்த, கிரிந்தி ஓயா, அம்பதித்த, கம்பளை புலஸ்தி நகர், சீகிரியா, ஊராத்தோட்டை

(10 புள்ளிகள்)

**(ii)** இத்தாலி, சுயெஸ் கால்வாய், பாருகச்ச, பர்மா, பீஜிங், மகாநதி, லண்டன், பாரசீக வளைகுடா

(08 புள்ளிகள்)

(ஆ) **(i)** *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

*A* - எல்லாளன் இலங்கையை ஆக்கிரமித்தபோது அனுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்
*B* - மாத்தளை அலுவிகாரையில் திரிபிடகம் நூலுருப் பெறும்போது ஆட்சி செய்த மன்னன்
*C* - இரண்டாம் உலகப் போரின் இறுதியில் நிபந்தனையின்றி சரணடைந்த யப்பான் பேரரசன்
*D* - 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியை வென்று சோவியத் ரஷ்யாவைத் தோற்றுவித்த சமவுடைமைத் தலைவன்

(04 புள்ளிகள்)

* தரப்பட்டுள்ள படங்களை அவதானித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்கள் விடைத்தாளில் எழுதுக.

**(ii)** 1. இந்த உருவில் காணப்படும் கட்டடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2. அது எந்த நாட்டில் உள்ளது?
3. இக்கட்டடம் எதன் பொருட்டு நிறுவப்பட்டுள்ளது?
4. இக்கட்டடத்தை **ஓவியங்களால்** அலங்கரித்த கலைஞர் ஒருவரின் பெயரைத் தருக.



(04 புள்ளிகள்)

**(iii)** 1. படத்தில் காணப்படும் கட்டடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2. அது எந்த நாட்டில் உள்ளது?
3. இந்தக் கட்டடம் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?
4. 1947 ஆம் ஆண்டு இக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னோடியாக விளங்கியவரின் பெயரைத் தருக.



(04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க.

# பகுதி II

**2.** **(i)** கீழே தரப்பட்டுள்ள *A, B, C* என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படும் நூல்களின் ஆசிரியர்களின் பெயரைக் குறிப்பிடுக.

*A* - டிமுண்டா *B* - பூகோள சாஸ்திர பிரவேசம் *C* - பாரசீக யுத்தம்

(03 புள்ளிகள்)

**(ii)** பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுக்கான கல்வெட்டுக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

*A* - வர்த்தக நகரங்கள் மற்றும் கைத்தொழில்கள் *B* - வர்த்தக சந்தை நிருவாகம்

*C* - நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் வருமானம் விகாரைக்குரியது என்பது பற்றியது.

*D* - ஆராமை நிருவாகம்

(பெரிமியன் குளம், பம்பரகல, களுதிய பொக்குண, சித்துல் பவ்வ, கொடவாய, பதுளைத் தூண் கல்வெட்டு, யட்டஹாலென, ரிட்டிகல) (04 புள்ளிகள்)

**(iii)** மகாசேன மன்னனின் ஆட்சிக் காலத்தின்

*A* - பொருளியல்

*B* - சமயம்

என்பவற்றின் முக்கியத்துவத்தை விபரிக்குக. (2 + 3 = 05 புள்ளிகள்)

**(iv)** அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** **(i)** பின்வரும் குளங்களை அமைத்த அரசர்களை முறையே குறிப்பிடுக.

*A* - ஹுருளு *B* - பதவியா *C* - கந்தளாய் (03 புள்ளிகள்)

**(ii)** *A, B,C, D* என்ற எழுத்துக்களால் குளம் ஒன்றின் கூறுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளைச் செய்யும் கூறுகளை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து அவற்றை ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - குளத்தின் நீரை வயல்களுக்கு வழங்குவதற்குக் கால்வாய்க்கு நீரைத் திறந்து விடுதல்

*B* - குளத்தின் நீரைக் கால்வாய்க்கு வழங்கும்போது குளக்கட்டைப் பாதுகாத்தல்

*C* - வான்கதவு உடைந்துபோகும் சந்தர்ப்பத்தில் குளத்து நீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தல்

*D* - மேலதிக மழைநீர் குளத்திற்கு வருவதைத் தடுத்தல்

(வான்கதவு (சுருங்கை) கலிங்கற்கட்டு, உள் வான்கதவு, கலிங்கல் தொட்டி, கலிங்கல் (மடைக்கதவு), குளக்கட்டு, உயர் அணை, சிறு குளங்கள்) (04 புள்ளிகள்)

**(iii)** இரண்டாம் பராக்கிரமபாகு தம்பதெனிய யுகத்தின் சிறந்த ஆட்சியாளன் எனக் கொள்வதற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட

*A* - அரசியல் *B* - சமயம்சார்

பணிகள் **ஒவ்வொன்று** வீதம் விபரிக்குக. (2 + 3 = 05 புள்ளிகள்)

**(iv)** தென்மேற்கு இராசதானிக் காலத்தில், சமூகத்தில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பான பண்புகள் **ஒவ்வொன்றினை** விளக்குக.

*A* - கலாசாரம் *B* - பொருளாதாரம்

(2 + 4 = 06 புள்ளிகள்)

**4.** **(i)** வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான விடயங்கள் *A, B, C* என்ற எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பொருத்தமான ஆண்டுகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

*A* - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருதல்

*B* - ஒல்லாந்தருக்கும், இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமை

*C* - ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல்

(கி.பி. 1500, கி.பி. 1505, கி.பி. 1638, கி.பி. 1766, கி.பி. 1803, கி.பி. 1815) (03 புள்ளிகள்)

**(ii)** இலங்கையில் சமய மறுமலர்ச்சி தொடர்பான நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிற்கு முன்னோடியாக விளங்கியவர்களின் பெயர்களை எழுதுக.

*A* - மகாபோதி சங்கத்தை நிறுவியமை

*B* - ஞாயிறு சமய பாடசாலை ஆரம்பித்தமை

*C* - பர்சிவல் பாதிரியாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை

*D* - ‘மத்ரஸா’ எனும் முஸ்லிம்களின் சமயப் பாடசாலைகளை மறுசீரமைத்தமை (04 புள்ளிகள்)

/பக். 3 ஐப் பார்க்க.

**(iii)** இலங்கையரை ஜனநாயக அரசியல் முறைக்குப் பயிற்றுவிப்பதில் டொனமூர் யாப்பு எவ்வாறு உதவியது என்பதை **இரண்டு** விடயங்களை முன் வைத்து விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பாரம்பரிய விவசாயம் வீழ்ச்சியடைந்தமைக்கான **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**5.** **(i)** *A* - சீதாவாக்கை இராச்சியத்திற்கு எதிரான முல்லேரியாப் போரில் தலைமை வகித்த போர்த்துக்கேயத் தளபதி

*B* - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளனாக இருந்தவன்

*C* - வீரசுந்தர பண்டாரவைப் பொறிக் கிடங்கில் வீழ்த்திக் கொன்ற சீதாவக்கை மன்னன்

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

**(ii)** *A* - இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் சமாதானமாக செயற்பட்டமை

*B* - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் கி.பி. 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்தமை

*C* - சிவில் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிகளைக் கட்டாயமாக்கியமை

*D* - நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவியமை

மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய ஆளுநர்களின் பெயர்களை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(ஜோரிஸ் பன் ஸ்பீல் பேர்கன், வெஸ்ட் ரிஜ்வே, தோமஸ் மெயிட்லன்ட், லோரன்ஸ் பீல், ரொபட் பிரௌன்றிக், வில்லியம் பல்க், பன் எங்கல்பெக், பிரட்ரிக் நோர்த்) (04 புள்ளிகள்)

**(iii)** 'கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு தொன் ஜுவான் தர்மபாலனின் செயற்பாடுகள் காரணமாயமைந்தமையை **இரண்டு** உதாரணங்களுடன் விபரிக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** ஒல்லாந்தர் இலங்கையில் தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு 1766 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள் காரணமாயின என்பதனை **இரண்டு** உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (2 + 4 = 06 புள்ளிகள்)

**6.** **(i)** கீழே தரப்பட்டுள்ள ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் பின்னர் இலங்கையின் பிரதம மந்திரிகளாகப் பதவியேற்றவர்களின் பெயர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

*A* - 1947 *B* - 1956 *C* - 1965

(விஜயானந்த தஹநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல, டி.எஸ். சேனாநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க) (03 புள்ளிகள்)

**(ii)** 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள **இரண்டு** அடிப்படை மனித உரிமைகளைத் தருக. (04 புள்ளிகள்)

**(iii)** **(அ)** 1978 ஆம் ஆண்டு யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட **இரண்டு** பிரதிநிதித்துவ முறைகளைக் குறிப்பிடுக.

**(ஆ)** அவற்றில் **ஒன்று** செயற்படும் முறையைத் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

**(iv)** 1978 ஆம் ஆண்டு யாப்பின்படி

*A* - பாராளுமன்றம்

*B* - அமைச்சரவை

மேற்குறிப்பிட்டவை தொடர்பாக ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்கள் **ஒவ்வொன்று** வீதம் எழுதுக. (3 x 2 = 06 புள்ளிகள்)

## பகுதி III

**7.** **(i)** வேத காலத்தில் ஆரியர்கள் வழிபட்ட மூன்று தெய்வங்களின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

**(ii)** *A, B, C, D* என்ற எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறையில் அவற்றை எழுதுக.

*A* - பாடலிபுத்திரத்தை மகதத்தின் தலைநகராக்கிய மன்னன்

*B* - நந்த அரச வம்சத்தின் ஆரம்ப மன்னன்

*C* - செலியுகஸ் நிக்கேடருடன் போரிட்டு வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றியவன்

*D* - நான்காம் பௌத்த மகா நாட்டைக் கூட்டுவதற்கு முன்னோடியாக இருந்தவன்

(பிம்பிசாரன், மகா பத்மநந்தன், அஜாசத்ரு, சமுத்திர குப்தன், சந்திர குப்த மௌரியன், கனிஷ்கன், தனநந்தன், அசோகன்) (04 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க.

**(iii)** மகதத்தின் ஆட்சியைப் பலமடையச் செய்யும் பொருட்டுப் பிம்பிசார மன்னன் பின்பற்றிய **இரண்டு** வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

**(iv)** குப்தர் காலத்தில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட எழுச்சியைத் தெளிவுபடுத்துக.

*A* - கல்வி

*B* - இலக்கியம்

(06 புள்ளிகள்)

**8.** **(i)** மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு பிடித்தவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

*A* - கோள்கள் சூரியனை மையமாகக் கொண்டு விளங்கும் கொள்கை

*B* - கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் வருதல்

*C* - தொலை நோக்கி

(கலிலியோ கலிலி, மைக்கல் சர்டெஸ், ஜொஹன்ஸ் கெப்லர், நிக்கலஸ் கொப்பர்னிகஸ், தோமஸ் மூர்)

(03 புள்ளிகள்)

**(ii)** மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** நாடுகாண் பயணங்களின் விளைவாக உலகில் **அரசியல், பொருளாதாரம்** ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் **ஒவ்வொன்றினை** எழுதுக. (05 புள்ளிகள்)

**(iv)** **(அ)** ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயச் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த **இருவரின்** பெயர்களை எழுதுக.

**(ஆ)** சமயச் சீர்திருத்தத்தின் விளைவாக ஐரோப்பிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் **இரண்டினைத்** தெளிவுபடுத்துக.

(06 புள்ளிகள்)

**9.** **(i)** இந்தியத் தேசிய காங்கிரசின் புரட்சிகரத் தலைவர்கள் **மூவரின்** பெயர்களை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(பால கங்காதர திலகர், சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திரபோல், தடாபாய் நபரோஜி, லாலா லஜ்பதி ராய், கோபால கிருஷ்ண கோகலே) (03 புள்ளிகள்)

**(ii)** 1857 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (04 புள்ளிகள்)

**(iii)** இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு மகாத்மா காந்தி பின்பற்றிய அகிம்சை வழிகள் **இரண்டினைத்** தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

**(iv)** மெய்ஜி சீர்திருத்தத்தின்போது யப்பானின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றினை** விபரிக்குக. (06 புள்ளிகள்)

**10.** **(i)** முதலாம் உலக யுத்தத்தின்போது நட்பு அணியில் உள்ளடங்கிய **மூன்று** நாடுகளின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

**(ii)** முதலாம் உலக மகா யுத்தத்திற்கான **இரண்டு** காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

**(iii)** உலக சமாதானத்தின் பொருட்டு நிறுவப்பட்ட சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் **இரண்டினைத்** தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

**(iv)** “பனிப்போர் காலத்தில் இரு அணிகளுக்கிடையில் நடைபெற இருந்த மோதல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டுள்ளன.” இவ்வாறான **மூன்று** சந்தர்ப்பங்களைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

***

The National e-Learning Portal for The General Education

## க.பொ.த. (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2015

**1.** (அ) **(i)**



1. (அ) (ii)

